**றம்புக்கனை பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

றம்புக்கனை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தும் தகவல்களின் பொழிப்புடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு றம்புக்கனை பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின்

பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த கணிப்பீட்டின் பின்னர் வருமான பில்லிடலிற்கு பதிலாக, 04 வருமான விடயங்களில் ஆண்டில் கிடைத்த வருமானம் ரூபா 2,372,276 தொகை பில்லிடப்பட்ட வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் வருடாந்த கணிப்பீட்டின் பின்னர் பெறுமதிகளை கணக்கீடு செய்வதென. | கணக்குகளை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | சுற்றுலா ஹோட்டல் வருமானமாக 2022 ஆண்டிற்காக கிடைத்த ரூபா 402,219 வை 2023 ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. அவ்வாறே, இந்த தொகை 2022 ஆண்டிற்காக கடன்படுனராகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவிய ரூபா 385,102 ஆன கடன்கொடுனர், 2018 ஆண்டை விட பழைய ரூபா 1,274,477 ஆன முற்பணம் மற்றும் ரூபா 15,617,625 ஆன நிலையான சொத்துடன் தொடர்பான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | அட்டவணைகளை கண்டறிய முடியாததுடன் மேலும் கண்டறிந்து சீராக்குவதென. | அட்டவணைகளை சமர்ப்பிக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 64,947,431 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 48,693,369 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

சுபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 13,209,069 | 12,629,922 | 11,971,803 | 5,670,745 | 13,200,007 | 11,678,914 | 11,090,388 | 6,009,794 |
| வாடகை | 18,842,914 | 15,301,888 | 13,753,511 | 4,432,293 | 14,976,791 | 12,334,931 | 11,159,829 | 3,001,502 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 3,975,500 | 4,400,625 | 4,722,307 | 361,371 | 3,926,510 | 2,194,377 | 2,018,570 | 285,088 |
| ஏனைய வருமானம் | 101,373,820 | 95,645,927 | 48,843,144 | 35,587,750 | 44,080,973 | 65,214,938 | 72,545,970 | 39,876,206 |
| | 137,401,303 | 127,978,362 | 79,289,765 | 46,052,159 | 76,184,281 | 91,423,160 | 96,814,757 | 49,172,590 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியன்று நிலுவை வீதவரி, ஏக்கர் வரி, வாடகை மற்றும் நீதிமன்ற தண்டப்பண மீதி ரூபா 17,170,677 ஆனதுடன் அதனுள் 05 ஆண்டுகளை விட பழைய ரூபா 2,952,729 ஆன மீதி காணப்பட்டது. | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மின்வலு மற்றும் சக்திவலு அமைச்சின் செயலாளரின் அறிவுறை பிரகாரம் தேவையான அங்கீகாரம் பெறப்படாது 187 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. | வீதி விளக்குகள் பொருத்த தேவையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதென. | முறையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | கதிர்காமம் கோவிலிற்கு சொந்தமான சபை கட்டிடம் அமைந்துள்ள காணியில் சபை நிதியத்தால் ரூபா | இக்காணியின் ஒப்படை கட்டளையை கண்டறிந்துள்ளதாகவும் | சொத்துக்களின் உரிமை பிரச்சினை அற்றதாக வேண்டும். |

| | | |
|---|---|---|
| 97,595,816 செலவில் அங்கு கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு இருந்ததுடன் ரூபா 2,500,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்த காணியின் பெறுமதியை உறுதி செய்ய சான்றுகள் இருக்கவில்லை. | அதனை உறுதி செய்து கொண்ட பின்னர் கட்டிடத்தின் மற்றும் காணியின் பெறுமதியை கணக்கீடு செய்வதென. | |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டில் வியாபார அனுமதிப் பத்திர கணிப்பீடொன்று செய்திருக்காததால் கிடைத்த வருமானம் பில்லிடப்பட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. இதன் காரணமாக நிலுவை வருமானம் எதுவும் வெளிப்படையாக வில்லை. | 2024 ஆண்டில் முறையாக மேற்கொள்ள அறிவுறை வழங்கியுள்ளதாகவும் கணிப்பீட்டை மேற்கொண்டு பில்லிடப்பட்ட வருமானத்தை கணக்கீடு செய்வதென. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திவிநெகும் அமைச்சிலிருந்து 2015 ஆண்டில் அன்பளிப்பாக கிடைத்த ரூபா 348 கல்வனைஸ் கொடிக் கம்பங்கள் காணமல் போயிருந்தன. | தவிசாளரின் அறிவுறை பிரகாரம் விநியோகித்து உள்ளதாகவும் தற்போதுள்ள கொடிக் கம்பங்களை வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளிற்கு பயன்படுத்துகிறேன். | சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகார பதவி எண்ணிக்கையில் 25 வெற்றிடங்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மூன்று மிகையும் காணப்பட்டன. 11 ஊழியர்களிற்கு அவர்களின் கடமையின் அல்லாத வேறு பதவிகளில் கடமை ஒப்படைக்கப்பட்டு இருந்தன. | அவதானிப்பு ஏற்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அலுவலர் 05 பேர்களில் நிலுவை கடன் ரூபா 358,441 தொகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | ஊழியர் கடனை அறவிட வேண்டும். |